சுக்குவில் தரும் விளக்கம்: ஒருங்கிணைத்தல் / பாடசாலை - பெற்றோர் இணைந்து செயலாற்றுதல்

# கோட்பாடுகளும் செயல்பாடுகளும்

## சுக்குவில் பாடசாலைகளும் பாலர்பாடசாலைகளும்

→ எங்கள் பாடசாலை-பாலர்பாடசாலைப் பிள்ளைகளை முன்னேற்றும் மையங்கள். எல்லாத் தேசிய இனத்தவர்களும் ஒருவருடன் ஒருவர் திறந்த மனத்துடனும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும் நடக்கின்றனர்.

→ வகுப்புக்களில் வேறுபட்ட இயல்புகளையுடைய பிள்ளைகள் இருப்பினும் அவர்களை ஒரே மாதிரியாக நடத்துகின்றார்கள்.

→ பல்வேறு கலாச்சாரத்தவர்களின் உரிமையையும் வாய்ப்பையும் புரிந்து கொள்கின்றன.

→ எல்லாப் பிள்ளைகளிற்கும் தரமான கற்பித்தலுடன் அதி கூடியளவு முன்னேற்றத்திற்கு முயற்சியும் எடுக்கின்றன. அதன் மூலம் பாடங்களிலும் கற்பிக்கும் முறையிலும் நிறைவு காண்கின்றன. மாண,மாணவிகளும் கற்பிப்போரும் ஒருவருக்கு ஒருவர் மதிப்புக் கொடுத்தும் அவதானமாகவும் நடந்து கொள்கின்றார்கள்.

→ குறிப்பிட்ட தேவைகளிற்கு நேரடியாகத் தொடர்பு கொள்கின்றன.

→ ஒருங்கிணைப்பிற்கு உதவிபுரிவதுடன் தகவல்களை வழங்க, பங்கெடுக்க, உரையாட, கருத்துக்களைப் பரிமாறி சேர்ந்து செயல்பட ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

→ குடும்பத்தில் பேசும் மொழியையும் தாய்மொழி கலாச்சார வகுப்புக்களையும் அதற்குப் பிள்ளைகள் சமூகமளிப்பதற்கு சந்தர்ப்பமளிப்பதையும் ஆதரிக்கின்றன.

→ மொழியை புரிந்து கொள்ளும் சிக்கல்களின் போது ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள மொழிபெயர்ப்பாளரை ஒழுங்குபடுத்தும்.

## பெற்றோர்

→ பிள்ளையினுடைய முன்னேற்றத்திற்கு ஆதரவாகவிருத்தல்.

→ பாடசாலை வேலைகளில் ஆர்வம் காட்டுதல்.

→ பாடசாலை தகவல்களில் அக்கறை கொள்ளுதல்.

→ பாடசாலையுடன் இணைந்து செயலாற்றுதல்.

நாங்கள் பாடசாலையும் குடும்பமும் என்ற தலைப்பில் உங்களுடன் கலந்துரையாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். **சுக்குவில் ஒருங்கிணைப்பு விளக்கத்திற்கான** உங்களுடைய அபிப்பிராயம் எங்களிற்கு ஆவலாகவுள்ளது! (இணைப்பைப் பார்க்கவும்)

பல மொழி பேசுபவர்களிற்கு:

→ ஜேர்மன் மொழியைக் கற்பதன் மூலம் மற்றவர்களுடன் உரையாட சந்தர்ப்பம் கிடைக்கும்.

→ இரு கலாச்சாரங்கள் போன்று ஜேர்மன் மொழி, முதல்மொழி இவைகளும் சிறந்த அனுகூலமாகும்.

→ வீட்டில் தொடர்ச்சியாக தாய்மொழியில் உரையாடுங்கள்.

→ உங்கள் பிள்ளை தாய்மொழி கலாச்சார வகுப்பிற்கு சமூகமளிக்க சம்மதியுங்கள்.

Link: http://www.so.ch/de/pub/departemente/dbk/avk/infos/tipps fuer eltern.htm